# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, வாடகைக் குடியிருப்பாளர் பாதுகாப்பு (சிறப்பேற்பாடுகள்) (திருத்த)ச் சட்டம்

---

*[1984, ஏப்ரில் மாதம் 26 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1984, ஏப்ரில் மாதம் 27 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: சதம் 45 தபாற் செலவு : சதம் 60

**1984 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, வாடகைக் குடியிருப்பாளர் பாதுகாப்பு (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்**

[1984, ஏப்பிரில் மாதம் 26 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 64/83
1617

**1970 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, வாடகைக் குடியிருப்பாளர் பாதுகாப்பு (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1984 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, வாடகைக் குடியிருப்பாளர் பாதுகாப்பு (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதாம் ஆண்டின் 28 ஆம் இலக்க, வாடகைக் குடியிருப்பாளர் பாதுகாப்பு (சிறப்பேற்பாடுகள்) சட்டமானது, எல்லா நோக்கங்களுக்காகவும், 1983 ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் 18 ஆந் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் இச்சட்டம் தொடங்குந் தேதிவரை செயற்பாட்டிலிருந்துள்ளதாகவும் செயற்பாட்டிலிருப்பதாகவும் கருதப்படல் வேண்டும். 1970 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டம் தொடர்ந்து வலுவிலிருத்தல்.

3. தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான, 1970 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க வாடகைக் குடியிருப்பாளர் பாதுகாப்பு (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 12 ஆம் பிரிவானது, "பதின்மூன்று ஆண்டுகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் "பதினெட்டு ஆண்டுகள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது. 1970 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்துமூன்றும் ஆண்டு நொவம்பர் 18 ஆந் தேதியன்று தொடங்கி, இச்சட்டம் தொடங்குகின்ற தேதியன்று முடிவுறும் காலப்பகுதியின்போது, 1970 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, வாடகைக் குடியிருப்பாளர் பாதுகாப்பு (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ், ஏதேனும் வளவின் வாடகைக் குடியிருப்பாளர் அல்லது இருப்பாட்சி கொண்டிருக்கும் எவரேனும் ஆள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளாரென்று அறிவிக்கப்பட்டதன்மீது ஆணையாளரானவர் அறிவித்தல் தேதியன்று அல்லது எத்தேதியன்று வெளியேற்றல் நடைபெற்றுள்ளதாகச் சார்த்தப்பட்டுள்ளதோ அத்தேதியன்று மேலே சொல்லப்பட்ட சட்டமானது வலுவிலிருக்கவில்லையென்ற காரணத்தின்மீது, சார்த்தப்பட்ட வெளியேற்றம் பற்றி விசாரிப்பதனை மறுக்கும் கட்டளையொன்றை ஆக்கியிருக்குமிடத்து, பின்வரும் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படல் வேண்டும் :— வலிதாக்கல்.

(அ) அத்தகைய கட்டளையானது வெற்றானதாகவும், வெறிதானதாகவும் இருந்துள்ளதெனவும் இருக்கின்றதெனவும் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) ஆணையாளரானவர் அத்தகைய விடயத்தைப் புதிதாக அழைக்கவும், கேட்கவும், தீர்மானிக்கவும் இத்தால் அதிகாரமும் தத்துவமும் அளிக்கப்பட்டுள்ளார், தேவைப்படுத்தப்பட்டுள்ளாரென்பதுடன் அதற்கான நியாயாதிக்கத்தினைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

இப்பிரிவில், "ஆணையாளர்" என்பது 1970 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, வாடகைக் குடியிருப்பாளர் பாதுகாப்பு (சிறப்பேற்பாடுகள்) சட்டத்திலுள்ள அதே கருத்தைக் கொண்டதாகும்.